வாக்குமூலம்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
சி.சி.எண்.78/2023
வழக்கு சாட்சி – அ.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சக்திவேல் | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.12.2023

**( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தேனி மதுவிலக்கு பிரிவில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன் கடந்த 12.7.2022 அன்று காவல் ஆய்வாளரின் உத்தரவு பெற்று சேகர் சார்பு ஆய்வாளர், நான் என்னுடன் 626 நாகராஜ், சிஐயு தலைமைக் காவலர் 1647 திரு. கோபால் சிறப்பு அலுவலாக அல்லிநகரம் பாண்டி கோவில் அருகே கிழக்கில் இருந்து மேற்கு நடந்து சென்ற மேகமலை காளியப்பன் மகன் குணசேகரனை ரகசிய தகவலாளி அடையாளம் காட்ட சார்பு ஆய்வாளர் அவர்கள் அவரை சோதனை செய்வதற்கு சோதனை சம்மத கடிதம் கொடுத்து அதில் நான், சார்பு ஆய்வாளர் மற்றும் நாகராஜ் ஆகியோர் கையொப்பம் செய்தோம்,. எதிரி குணசேகரன் கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் பையில் இருந்து 100 கிராம் கஞ்சாவையும் கையில் 130/– பணத்தையும் கைப்பற்றினோம். எங்கள் கையில்இருந்த எலக்ட்ரானிக் தராசினில் எடைபோட்டோம். அதே இடத்தில் சார்பு ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்தார். அதில் நான், என்னுடன் இருந்த நாகராஜ், சார்பு ஆய்வாளர் மற்றும் எதிரி ஆகியோர் கையொப்பம் செய்தோம். அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சாவை கையில் வைத்திருந்ததற்காக குற்றத்திற்கு சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரியை கைது செய்து கைது குறிப்பாணை தயார் செய்து கைது குறித்த விபரத்தை எதிரியின் தாயார் குருவம்மாளுக்கு தெரிவித்தார் எதிரியையும் கஞ்சாவையும் கைப்பற்றி அல்லிநகரம் காவல் நிலையம் வந்த தனியறிக்கை தயார் செய்து சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரியை அல்லிநகரம் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அத்தாட்சி ஏற்கனவே அசா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என தெரிவிக்கப்பட்டது.